கிடைக்கிறது. இன்னும் சொல்லப் போனால், அதைவிட இன்னும் அதிகக் கூலிகூட சில இடங்களில் அவர்களுக்குக் கிடைக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. து. மூர்த்தி.

திரு.து. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் நாகை காயிதேமில்லத் மற்றும் தஞ்சை மாவட்டங்களில் குறிப்பாக அதிக விவசாயக் கூலித் தொழிலாளர்கள் நிலமற்ற ஏழைகளாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் வேலை செய்துவிட்டு, மற்ற நாட்களில் வேலையில்லாமல் இருக்கிறார்கள். மிகவும் சிரமப்படும் நிலை இன்றைக்கும் அவர்களுக்கு வருகிறது. எனவே, அவர்கள் பயன்பெறும் வகையில், வேறு எந்தப் பயிரையாவது பயிர்செய்யும் வகையில் திட்டங்களை வகுத்து, அவர்கள் மற்ற நாட்களில் வேலை செய்வதற்கேற்ற வகையில் ஏதாவது ஒரு திட்டத்தைக் கொண்டுவர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மற்றும் நாகை காயிதே மில்லத் மாவட்டங்களில் 6 மாதங்களுக்கு விவசாயப் பணிகள் நடைபெறுகின்றன. மீதி 6 மாதங்களுக்கு நிலங்களைப் பயிரிடாமல் விட்டுவிடுகிறார்கள். ஆனால், அந்த இரண்டு மாவட்டங்களிலும் நிலத்தடி நீர் அதிகமாக இருக்கிறது. எனவே, பயிர் செய்யக்கூடிய அந்தப்பருவ காலத்திற்குப் பிறகு மீண்டும் அவர்கள் பயிர் செய்யவேண்டிய நிலையை அரசு உருவாக்க இருக்கிறது. இது நடைமுறைப்படுத்தப் படுகிறபோது எல்லா நாட்களுக்கும் அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 190, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

190—

ஜெ.ஜெ. 92 அரிசியை ஏற்றுமதி செய்தல்

* **44060—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெ.ஜெ.92 அரிசியை ஏற்றுமதி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திருமதி. கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், பிறகு தர்மமே வெல்லும் என்பதை அவ்வப்போது மெய்ப்பித்து வெற்றிக் கொடி நாட்டி வருகின்ற தர்மயுத்தத்தின் தளநாயகி (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் ஒளிவிளக்கு, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய முயற்சியினால், நாட்டின் அரிசி உற்பத்தியில் ஏழாவது இடத்தில் இருந்த தமிழகம் இன்றைக்கு இரண்டாவது இடத்தை வகிக்கிறது. உற்பத்தியைப் பெருக்கினால் மட்டும் போதாது, உற்பத்தித் திறனையும் பெருக்க வேண்டுமென்ற லட்சியம் கொண்ட நமது மாண்புமிகு முதல்வர் அவர்களின் புனிதப் பெயரைக் கொண்ட ஜெ.ஜெ. 92 அரிசி, தரம் உயர்ந்த மணம் வீசும் அரிசியாகும். உலகச் சந்தையிலே நல்ல கிராக்கியைப் பெற்றிருக்கிற அரியானா மாநிலத்தில் விளையும் பாசுமதி அரிசிக்கு இணையான நறுமணமும் சுவையும் பெற்ற ஜெ.ஜெ. 92 அரிசியை இந்திய வேளாண்மை ஆராய்ச்சி மையத்தில் உள்ள விஞ்ஞானிகள் மிகச் சன்ன ரக வாசனை அரிசி என்று சான்றளித்துள்ளனர். இந்தச் சிறப்பு மிக்க அரிசியை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு சிறப்பு மானியம் வழங்குமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, "சூழும் பகையை வெல்லும் வேழம்" டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆவார்கள். இவர்களுடைய ஆட்சிக் காலம்தான், தமிழ்நாட்டினுடைய அரிசியை மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய காலமாகக் கனிந்திருக்கிறது. ஜெ.ஜெ. 92 என்ற வாசனை ரக அரிசி 1992-93 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இது காவிரி டெல்டா பகுதியில் இன்றைக்கு பயிரிடப்பட்டு வருகிறது. இந்த ரக அரிசி பாசுமதி ரக அரிசியைப் போன்று ஏற்றுமதிக்கு உரிய ரகமாகும். எனவே, இதனை ஏற்றுமதி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டு உள்ளது. இதற்காக மத்திய அரசின் அனுமதி தேவைப்படுகிறது. ஏற்றுமதி ரக அரிசி என அறிவிக்கலாமா என்பதை 'அப்பேடா' என்று சொல்லக்கூடிய— வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி வளர்ச்சிக் கழகம், டெல்லி,— நிறுவனத்துடன் அரசு தொடர்பு கொண்டு வருகிறது. குறிப்பாக ஜெ.ஜெ. 92 சன்ன ரக அரிசியைப் பெருமளவு ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகளை, மத்திய அரசு, 'தாய்' நிறுவனம்,

1995 ஏப்ரல் 3]

வேளாண்மைத் துறை மற்றும் உணவு மற்றும் உணவுப்பொருள் நுகர்வோர் வாணிபக் கழகம் ஆகியவைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது.

முற்பகல் 10-40

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலக அரங்கிலே இந்த ஜெ.ஜெ. 92 அரிசியின் சிறப்பை அறிவதற்கும், அதிக அளவில் உற்பத்தி செய்து உலகச் சந்தையில் இருக்கின்ற அமெரிக்கா, பாகிஸ்தான், தாய்லாந்து போன்ற நாடுகளைப் போல தனி ஒரு இடத்தை உலகச் சந்தையில் பிடிப்பதற்கு ஏதுவாக பிலிப்பைன்ஸ் நாட்டிலே லாஸ் பனோஸ் என்ற இடத்திலுள்ள சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ஜெ.ஜெ. 92 அரிசியை அனுப்புவதற்கும் அரசு ஆவன செய்யுமா என்றும், ஜெ.ஜெ. 92 ரக நெல்லை நேரடிக் கொள்முதல் மையங்கள் மூலமாக கொள்முதல் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேரடிக் கொள்முதல் நிலையங்கள் வாயிலாக இந்த ரக நெல்லை கொள்முதல் செய்கிறார்கள் என்பதை முதற்கண் நான் தெரிவித்துக்கொள்கிறேன். 1994-95 ஆம் ஆண்டில் இதுவரை 2500 ஹெக்டேரில் அந்த நெல் பயிரிடப்பட்டு அதன் மூலம் 6700 மெட்ரிக்டன் மகசூல் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அதேநேரத்தில் அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு ஏற்றுமதியாளர்கள் முன்வருவார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு தேசிய வங்கிகள் மற்றும் ஏற்றுமதி-இறக்குமதி வங்கிகள் மூலமாக கடன் வசதி பெற்றுத் தரப்படும். இந்தக் கடனுக்குரிய வட்டி முழுவதையுமே 'அப்பேடா' நிறுவனம் செலுத்திவிடும். எனவே, வட்டி இல்லாத கடனாக இந்தத் தொகையைப் பெற்று இந்த அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அனைத்து வாய்ப்புகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்படுத்தச் செய்வார்கள். எனவே, ஏற்றுமதியாளர்கள் இதனைப் பயன்படுத்திக்கொண்டு தமிழ்நாட்டிலே விளையக்கூடிய வாசனை ரக அரிசி என்று சொல்லக்கூடிய ஜெ.ஜெ. 92 ரகத்தையும் இதர ரகங்களையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு முன்வர வேண்டுமென்று இந்த மன்றத்தின் வாயிலாக அழைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜெ.ஜெ. .92 நெல்லை தஞ்சை மாவட்டத்தில் மட்டுமல்லாது அனைத்து மாவட்டங்களிலும் பயிரிட அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதோடு, ஒரு ஏக்கருக்கு எத்தனை டன் ஜெ.ஜெ. 92 நெல் விளைகிறது என்பதையும் அறிவிப்பார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா பாசனப் பகுதியிலே முதன் முதலாக இந்த நெல் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்பு எல்லா மாவட்டங்களிலும், நேரடி நீர்ப்பாசனம் பெறக்கூடிய இடங்களில் எல்லாம் சாகுபடி செய்வதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில், ஒரு ஹெக்டேருக்கு 6 டன்னிலிருந்து 7 டன் வரை நெல் மகசூல் கிடைக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. தேனி பன்னீர்செல்வம்.

திரு. தேனி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஜெ.ஜெ.. நெல்லை உள்ளூர் அரைவை ஆலைகளில் அரைப்பதில் சிரமம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அது உண்மையா? அப்படி அரைக்கின்ற அரிசி தரம் உயர்ந்த அரிசி என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த தரம் உயர்ந்த அரிசி ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்கின்ற வகையில் ரேஷன் கார்டுகளுக்கு வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா; மானிய விலையில் ஏழைகளுக்குக் கிடைப்பதற்கு உதவி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தேனி பன்னீர் செல்வம், இந்தக் கேள்வியை சம்பந்தப்பட்ட அமைச்சருக்குப் போட்டால் சரியாக இருக்கும். எனவே, இதற்குப் பதில் வேண்டாம்.

அடுத்த வினா எண் 191, திரு. இராம. இராமநாதன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.